
# دليل الحج

# ஹஜ் வழிமுறைகள்

தொகுப்பு
தீன் ஹஜ் உலமா குழு



# உள்ளே

## ஹஜ் வழி முறைகள்


| | | |
|---|---|---|
| 1 | ஹஜ்ஜுக்கு செல்வோம் | 3 |
| 2 | ஹஜ் செயல் முறை | 6 |
| 3 | மினாவில் ஓதும் துஆ | 9 |
| 4 | அரஃபாவின் திக்ருகள் | 11 |
| 5 | அரஃபாவின் துஆக்கள் | 12 |
| 6 | அரஃபா துஆவின் பொருள் | 26 |
| 7 | ஸய்யிதுல் இஸ்திஃபார் | 40 |
| 8 | முஸ்தலிஃபாவில் ஓதும் துஆ | 48 |
| 9 | ஜம்ராவில் கல்லெறியும் போது | 53 |
| 10 | குர்பானி கொடுக்கும் போது | 54 |
| 11 | முடிகளை களைந்த பின் | 55 |
| 12 | தவாஃபுல் விதாஃ துஆ | 57 |

பிஸ்மிஹீ தஆலா

# ஹஜ்ஜுக்கு செல்வோம்

புகழனைத்தும் வல்ல இறைவனுக்கே! அவனே நம்மை படைத்துள்ளான். அனைவரும் அவன் அளவில் மீள வேண்டியுள்ளது. அவனுடைய தூதர் ரஹ்மதுல்லில் ஆலமீன் நம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் தோழர்களான சத்திய சஹாபாக்கள், தாபிஊன்கள், இமாம்கள் அனைவரின் மீதும் இறைவனின் சாந்தி நிலவட்டுமாக.

வல்ல இறைவன் இவ்வுலகைப் படைத்து அதில் மனிதர்களை வாழச் செய்து அவர்களுக்கு பல அத்தாட்சிகளையும் அளித்துள்ளான். அவர்கள், அவற்றை காணும் போது தான் படைக்கப்பட்ட நோக்கத்தை அறிந்து கொண்டு செயல்படும் விதமாக அவை அமைந்துள்ளன. இறைவன் அளித்துள்ள அத்தாட்சிகளில் மாபெரும் அத்தாட்சி மற்றும் வரலாற்று சின்னமாக மக்காவில் அமைந்துள்ள கஃபா என்னும் இறை இல்லம் உள்ளது.

இறைவனை வணங்க வேண்டும் என்பதற்காக உலகில் முதல் முதலாக கட்டப்பட்ட இறை இல்லம்

www.DheenHajService.com

இதுதான். இறைவனின் நண்பர் என்று அழைக்கப் பட்ட நபி இப்ராஹீம் (அலை) அவர்களால் மீண்டும் புதுப்பித்து கட்டப்பட்ட இறை இல்லம் இதுதான். அவர்களின் பிராத்தனையின் காரணமாக இன்று வரை இறைவன் அந்த இல்லத்தில் தன் அருளைப் பொழிந்து கொண்டிருக்கிறான். அந்த இறைஇல்லம் மட்டும் அல்லாது அதன் சுற்றுப்புறம் அனைத்தையும் உள்ளடக்கி மனிதர்களுக்கு அபயம் அளிக்கும் இடமாக இறைவன் அதை ஆக்கியுள்ளான். அங்கு எவ்வித அனாச் சாரங்களும், அக்கிரமங்களும் நடக்காது. உலகிலேயே அமைதியின் இருப்பிடமாக இது அமைந்துள்ளது. உலகில் வேறு எந்த நகரமும் உயிரினங்களுக்கு இது போன்று அபயம் அளிப்பதாக இன்று வரை அமைந்திருக்கவில்லை.

முஸ்லிமாக பிறந்துள்ள ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் மக்கா மாநகர் சென்று வரும் அளவிற்கு செல்வத்தையும் உடல் வலிமையையும் பெற்றுவிடுவாராயின் அவர் அவசியம் அங்கு சென்று ஹஜ் என்னும் இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையை செய்தாக வேண்டும் என்று இஸ்லாம் அவருக்கு கட்டளையிடுகிறது.



www.DheenHajService.com

**அதில் தெளிவான அத்தாட்சிகள் உள்ளன. (உதாரணமாக) நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் நின்ற இடம் "மகாமு இப்ராஹீம்" இருக்கின்றது. மேலும் எவர் அதில் நுழைகிறாரோ அவர் அச்சம் தீர்ந்தவராகப் பாதுகாப்பு பெறுகிறார். இன்னும் அதற்கு செல்வதற்குரிய பாதையில் பயணம் செய்ய சக்தி பெற்றிருக்கும் மனிதர்களுக்கு அல்லாஹ்வுக்காக அவ்வீடு சென்று ஹஜ் செய்வது கடமையாகும். ஆனால், எவரேனும் அதை நிராகரித்தால் அதனால் அல்லாஹ்வுக்கு குறையேற்படப் போவதில்லை ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் உலகத்தோர் எவர் தேவையும் அற்றவனாக இருக்கின்றான்.**

(அல் குர்ஆன் **3:97)** என்று அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்.

மேலும் "பாவங்கள் கலக்காத ஹஜ்ஜுடைய கூலி சுவர்கத்தை தவிர வேறில்லை." என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இறைவன் மற்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ள வகையில் எவரிடத்தில் ஹஜ் செய்வதற்கான வசதியும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளதோ அவர் அவசியம் ஹஜ் செய்தாக வேண்டும். வல்ல ரஹ்மான் நம் அனைவருக்கும் ஹஜ் செய்யக்கூடிய பாக்கியத்தை ஏற்படுத்தி தருவானாக! ஆமீன்!!



www.DheenHajService.com

# ஹஜ் செயல் முறை

## *துல்ஹஜ் 8 -ம் தேதி (மினா)*

1. குளிப்பது, மக்காவில் இஹ்ராம் அணிவது
2. இரண்டு ரக்அத் நபில் தொழுவது. தலையிலிருந்து துணியை நீக்கி ஹஜ்ஜுடைய நிய்யத் செய்வது.
3. சுபுஹு தொழுவது, பின்னர் தல்பியா ஓதியவர்களாக மினாவுக்கு செல்வது. ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் 3 முறை தல்பியா ஓதவும்.
4. பிறை 9, சுபுஹுலிருந்து தக்பீருக்குப் பின்னர் தல்பியா ஓதவும். பின்னர் அரஃபா மைதானத்திற்குப் புறப்பட வேண்டும்.

## *துல்ஹஜ் 9 -ம் தேதி (அரஃபா தினம்)*

1. அரஃபாவில் லுஹர் தொழுத பின்னர் திக்ர், ஸலவாத்து, இஸ்திஃபார் ஓதவும்.
2. அஸர் தொழுத பின்னர் சூரியன் மறையும் வரை துஆ கேட்கவும். பின்னர் மஃரிப் தொழாமல் தல்பியா கூறி முஸ்தலிபாவிற்கு செல்லவேண்டும்.

www.DheenHajService.com

3. மஃரிபையும், இஷாவையும் முஸ்தலிபா சென்றடைந்தவுடன் “ஜம்வு” செய்து தொழுகவும் ஒரு பாங்கு இரண்டு இகாமத்கள் கூறி தொழவேண்டும்.
4. சுமார் 70 பொடி கற்களை சேமித்து வைத்துக் கொள்ளவும்.
5. இரவு முழுவதும் முஸ்தலிபாவிலேயே தங்க வேண்டும்.
6. சுபுஹு தொழுத பின்னர் தல்பியா கூறியவர்களாக மினாவுக்குச் செல்ல வேண்டும்.

## துல்ஹஜ் 10 - *ம் தேதி (மினா)*

1. இஷ்ராக் தொழுகைக்குப் பின்னர் பெரிய ஷைத்தானுக்கு மட்டும் 7 கல் தனித்தனியாக ஒன்றன் பின் ஒன்றாக எறிய வேண்டும். முதல் கல் எறிந்தவுடன் தல்பியா ஓதுவதை நிறுத்தவும்.
2. குர்பானி கொடுக்கவும்.
3. தலை முடியை இறக்கிய பின்னர் இஹ்ராம் ஆடையை களைந்துவிடவும்.
4. பின்னர் 10 அன்றே உடன் அல்லது 12ம் தேதி சூரியன் மறைவதற்கு முன்பாக மக்கா சென்று தவாஃபா ஜியாரா செய்யவும்.

www.DheenHajService.com

இஹ்ராமுடன் இருந்தால் மட்டுமே ரமல் உண்டு. சாதாரண உடையில் இருந்தால் ரமல் இல்லை. இரவில் மினாவில் தான் தங்க வேண்டும். மினாவில் இரவு தங்குவது வாஜிபு.

## துல்ஹஜ் 11-ம் 12-ம் தேதி (மினா)

1. இந்த இரண்டு தினங்களிலும் உச்சி சாய்ந்த பின் ஜவாலுக்குப் பின்னர் முதலில் சிறிய ஷைத்தானுக்கும் அடுத்து நடுஷைத் தானுக்கும் அடுத்து பெரிய ஷைத்தானுக்கும் 7 கற்கள் வீதம் ஒன்றன் பின் ஒன்றாக எறியவும்.
2. சிறிய, நடு ஷைத்தானுக்கு கல் எறிந்து விட்டு துஆ கேட்கவும். பெரிய ஷைத்தானுக்கு கல் எறிந்துவிட்டு துஆ கேட்க வேண்டியதில்லை.
3. பிறை 12 -ல் கல் எறிந்த பின்னர் சூரியன் மறையும் முன் மினாவில் இருந்து மக்காவுக்கு புறப்பட வேண்டும். இல்லையென்றால் பிறை 13 ஆம் நாளும் மினாவில் தங்கி முன் போல் மூன்று ஷைத்தானுக்கும் முறையே கல் எறிவது வாஜிபாகும். பின்பு மக்கா புறப்படவும்.

**(பிறை 13-ல் தங்கி வருதல் சுன்னத்தாகும்.)**

www.DheenHajService.com

# மினாவில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ هٰذِهِ مِنًى فَامْنُنْ عَلَيَّ بِمَا مَنَنْتَ بِه عَلٰى

أَوْلِيَائِكَ وَأَهْلِ طَاعَتِكَ ، سُبْحَانَ اللهِ الَّذِيْ فِي

السَّمَاءِ عَرْشُهُ ، سُبْحَانَ اللهِ الَّذِيْ فِي الأَرْضِ

سَطْوَتُهُ ، سُبْحَانَ اللهِ الَّذِيْ فِي الْبَحْرِ سَبِيْلُهُ ،

سُبْحَانَ الله الَّذِيْ فِي الْجَنَّةِ رَحْمَتُهُ ، سُبْحَانَ اللهِ

الَّذِيْ فِي النَّارِ سُلْطَانُهُ ، سُبْحَانَ الله الَّذِيْ رَفَعَ

السَّمَآءَ وَوَضَعَ الأَرْضَ بِقُدْرَتِهِ ، سُبْحَانَ اللهِ

الَّذِيْ لاَ مَنْجَأَ وَلاَ مَلجَأَ مِنْهُ إِلاَّ إِلَيْهِ لَا حَوْلَ وَ لَا

قُوَّةَ إِلَّا بِاللهِ الْعَلِيِّ الْعَظِيْمُ.

யா அல்லாஹ் இது மினா. இவ்விடத்தில் உன்னுடைய நேசர்களுக்கும். உனக்கு வழிப்பட்

www.DheenHajService.com

டோருக்கும் எவ்வாறு பேருபகாரம் புரிந்தாயோ அவ்வாறே எனக்கும் நீ பேருபகாரம் புரிந்தருள் வாயாக. வானத்தில் தன்னுடைய அர்ஷ் அமைந்துள்ள ஒருவன் மகாத் தூயவன். பூமியில் தன்னுடைய அதிகாரம் அமைந்துள்ள ஒருவன் மகாத் தூயவன். கடலில் தன் பாதைகள் அமைந்துள்ள ஒருவன் மகாத் தூயவன். நரகில் தன் ஆதிக்கம் அமைந்துள்ள ஒருவன் மகாத் தூயவன். சொர்கத்தில் தன்னுடைய ரஹ்மத் அமைந்துள்ள ஒருவன் மகாத் தூயவன். வானத்தை உயர்த்தி பூமியை தன் வல்லமையால் கீழ் அமைத்த ஒருவன் மகாத் தூயவன். அவனை விட்டும் வெற்றி பெறுமிடமோ, ஒதுங்குமிடமோ அவன் பக்கமே தவிர வேறு இல்லையே அத்தகைய ஒருவன் மகாத் தூயவன். பாவங்களை விட்டுத் திரும்புதலும், நன்மைகள் செய்ய சக்தியும் உயர்வான மகத்தான அல்லாஹ்வின் உதவியைக் கொண்டே தவிர இல்லை.

**மினாவில் இருக்கும் போது நேரங்களை வீண் பேச்சுக்களில் கழிக்காமல் குர்ஆன் ஓதுதல், திக்ர், ஸலவாத், துஆக்களைக் கொண்டு அமல் செய்யவும்.**

www.DheenHajService.com

# அரஃபாவில் ஓத வேண்டிய திக்ருகள்

அரஃபாவில் லுஹர் தொழுத பின் அஸர் வரை எவ்வித வீண் பேச்சுக்களைப் பேசாமலும், தூங்காமலும் இருந்து தஸ்பீஹ் திக்ருகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

பின் வரும் சுன்னத்தான திக்ருகளில் ஒவ்வொன் றையும் நூறு தடவை ஓதிக் கொள்ள வேண்டும்.

سُبْحَانَ اللهِ وَالحَمْدُ لِلّٰهِ وَلَا إِلٰهَ إِلَّا اللهُ وَاللهُ أَكْبَرُ

وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللهِ الْعَلِيِّ العَظِيْمِ

---

لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَاشَرِيْكَ لَهُ لَهُ المُلْكُ وَلَهُ

الحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

---

قُلْ هُوَ اللّٰهُ أَحَدٌ اَللّٰهُ الصَّمَدُ لَمْ يَلِدْ وَلَمْ يُوْلَدْ

وَلَمْ يَكُنْ لَهُ كُفُوًا أَحَدٌ

www.DheenHajService.com

أَسْتَغْفِرُ اللهَ الْعَلِيَّ الْعَظِيْمَ الَّذِيْ لَا إِلٰهَ إِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ وَأَتُوْبُ إِلَيْهِ

---

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى إِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

## அரஃபாவில் ஓதும் துஆக்கள்

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ مَالِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّيْنَ ○

www.DheenHajService.com

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ هَدَانَا لِهٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ
لَوْلَا أَنْ هَدَانَا اللهُ. اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا
مُحَمَّدٍ وَعَلٰى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى
إِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ .
اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى آلِ سَيِّدِنَا
مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى إِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ
إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ. رَبَّنَا تَقَبَّلْ مِنَّا
إِنَّكَ أَنْتَ السَّمِيْعُ الْعَلِيْمُ وَتُبْ عَلَيْنَا إِنَّكَ أَنْتَ
التَّوَّابُ الرَّحِيْمُ .

www.DheenHajService.com

اَللّٰهُمَّ اِنَّكَ وَفَّقْتَنِيْ وَحَمَلْتَنِيْ عَلٰى مَا سَخَّرْتَ لِيْ
حَتّٰى بَلَّغْتَنِيْ بِاِحْسَانِكَ اِلٰى زِيَارَتِ بَيْتِكَ
وَالْوُقُوْفِ عِنْدَ هٰذَا الْمَشْعَرِ الْعَظِيْمِ اِقْتِدَاءً
بِسُنَّةِ خَلِيْلِكَ وَاِقْتِفَاءً بِاٰثَارِ خَيْرَتِكَ مِنْ
خَلْقِكَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ.
وَإِنَّكَ جَعَلْتَ لِكُلِّ ضَيْفٍ وَلِكُلِّ وَفْدٍ جَائِزَةً
وَلِكُلِّ زَائِرٍ كَرَامَةً وَلِكُلِّ سَائِلٍ عَطِيَّةً وَلِكُلِّ
رَاجٍ ثَوَابًا وَلِكُلِّ مُلْتَمِسٍ لِمَا عِنْدَكَ جَزَاءً وَلِكُلِّ
رَاغِبٍ إِلَيْكَ زُلْفًى وَلِكُلِّ مُتَوَجِّهٍ إِلَيْكَ اِحْسَانًا
وَقَدْ وَقَفْنَا بِهٰذَا الْمُشْعَرِ الْعَظِيْمِ رَجَاءً لِّمَا



www.DheenHajService.com

عِنْدَكَ فَلَا تُخَيِّبْ رَجَاءَنَا فِيْكَ يَا سَيِّدِنَا يَا
مَوْلَانَا يَا مَنْ خَضَعَتْ كُلُّ الْاَشْيَآءِ لِعِزَّتِهٖ
وَعَنَتِ الْوُجُوْهُ لِعَظْمَتِهٖ.

اَللّٰهُمَّ اِلَيْكَ خَرَجْنَا وَبِفِنَائِكَ اَنْجَانَا وَاِيَّاكَ
اَمَّلْنَا وَمَا عِنْدَكَ طَلَبْنَا وَلِاِحْسَانِكَ تَعَرَّضْنَا
وَلِرَحْمَتِكَ رَجَوْنَا وَمِنْ عَذَابِكَ اَشْفَقْتَنَا
وَلِبَيْتِكَ الْحَرَامِ حَجَجْنَا يَا مَنْ يَّمْلِكُ حَوَائِجَ
السَّائِلِيْنَ وَيَعْلَمُ ضَمَائِرَ الصَّامِتِيْنَ يَا مَنْ
لَيْسَ مَعَهُ رَبٌّ يُدْعٰي وَلَا اِلٰهَ يُرْجٰي وَلَا فَوْقَهُ
خَالِقٌ يُخْشٰي وَلَا وَزِيْرٌ يُؤْتٰي وَلَا حَاجِبٌ يُرْشٰي



www.DheenHajService.com

يَا مَنْ لَايُزْدَادُ عَلَي السُّؤَالِ اِلَّا كَرَمًا وَجُوْدًا وَعَلٰى كَثْرَةِ الْحَوَائِجِ اِلَّا تَفَضُّلًا وَاِحْسَانًا يَا مَنْ ضَجَّتْ بَيْنَ يَدَيْهِ الْاَصْوَاتُ بِلُغَاتٍ مُخْتَلِفَاتٍ يَسْأَلُوْنَكَ الْحَاجَاتِ اَسْأَلُكَ الْفَوْزَ بِالْجَنَّةِ وَالنَّجَاتَ مِنَ النَّارِ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ.

اَللّٰهُمَّ لَكَ الْحَمْدُ كُلُّهُ وَلَكَ الشُّكْرُ كُلُّهُ وَلَكَ الْمُلْكُ كُلُّهُ وَلَكَ الْخَلْقُ كُلُّهُ بِيَدِكَ الْخَيْرُ كُلُّهُ وَإِلَيْكَ يَرْجِعُ الْأَمْرُ كُلُّهُ أَسْأَلُكَ مِنَ الْخَيْرِ كُلِّه وَأَعُوْذُ بِكَ مِنَ الشَّرِّ كُلِّه اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ خَيْرَ

www.DheenHajService.com

الْمَسْأَلَةِ وَخَيْرَ الدُّعَاءِ وَخَيْرَ النَّجَاحِ وَخَيْرَ الْعَمَلِ وَخَيْرَ الثَّوَابِ وَخَيْرَ الْحَيَاةِ وَخَيْرَ الْمَمَاتِ وَثَبِّتْنِيْ وَثَقِّلْ مَوَازِيْنِيْ وَحَقِّقْ إِيمَانِيْ وَارْفَعْ دَرَجَتِيْ وَتَقَبَّلْ صَلَاتِيْ وَاغْفِرْ خَطِيْئَاتِيْ وَأَسْأَلُكَ الدَّرَجَاتِ الْعُلٰى مِنَ الْجَنَّةِ آمِينْ. اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ مِنْ خَيْرِ مَا سَأَلَكَ مِنْهُ نَبِيُّكَ سَيِّدُنَا مُحَمَّدٌ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ وَأَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا اسْتَعَاذَ مِنْهُ نَبِيُّكَ سَيِّدُنَا مُحَمَّدٌ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ. وَأَنْتَ الْمُسْتَعَانُ وعَلَيْكَ الْبَلَاغُ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللهِ الْعَلِيِّ الْعَظِيْمِ.

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ وَالْمُعَافَاةَ

الدَّائِمَةَ فِي الدِّيْنِ وَالدُّنْيَا وَالْاٰخِرَةِ وَالْفَوْزَ فِي

الْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ النَّارِ. رَبَّنَا لَا تُؤَاخِذْنَا إِنْ

نَسِيْنَا أَوْ أَخْطَأْنَا رَبَّنَا وَلَا تَحْمِلْ عَلَيْنَا إِصْرًا كَمَا

حَمَلْتَهُ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِنَا رَبَّنَا وَلَا تُحَمِّلْنَا مَا

لَا طَاقَةَ لَنَا بِهِ وَاعْفُ عَنَّا وَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا

أَنْتَ مَوْلَانَا فَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكَافِرِيْنَ.

لَا إِلٰهَ إِلَّا اللهُ الْحَلِيْمُ الْكَرِيْمُ ، سُبْحَانَ اللهِ

رَبِّ الْعَرْشِ الْعَظِيمِ ، وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ مُوجِبَاتِ رَحْمَتِكَ وَعَزَائِمَ



www.DheenHajService.com

مَغْفِرَتِكَ وَالْعِصْمَةَ مِنْ كُلِّ ذَنْبٍ وَالْغَنِيْمَةَ مِنْ
كُلِّ بِرٍّ وَالسَّلاَمَةَ مِنْ كُلِّ إِثْمٍ لاَ تَدَعْ لِيْ ذَنْبًا إِلَّا
غَفَرْتَهُ وَلاَ هَمًّا إِلاَّ فَرَّجْتَهُ وَلَا كَرْبًا إِلَّا نَفَّسْتَهُ
وَلَا ضُرًّا إِلَّا كَشَفْتَهُ وَلاَ حَاجَةً هِيَ لَكَ رِضًا إِلاَّ
قَضَيْتَهَا يَا أَرْحَمَ الرَّاحِمِيْنَ.

اَللّٰهُمَّ اهْدِنِيْ فِيْمَنْ هَدَيْتَ وَعَافِنِيْ فِيْمَنْ
عَافَيْتَ وَتَوَلَّنِيْ فِيْمَنْ تَوَلَّيْتَ وَبَارِكْ لِيْ فِيْمَا
أَعْطَيْتَ وَقِنِيْ شَرَّ مَا قَضَيْتَ إِنَّكَ تَقْضِيْ وَلَا
يُقْضٰي عَلَيْكَ فَإِنَّهُ لَا يَذِلُّ مَنْ وَالَيْتَ وَلاَ يَعِزُّ
مَنْ عَادَيْتَ تَبَارَكْتَ رَبَّنَا وَتَعَالَيْتَ فَلَكَ الْحَمْدُ

www.DheenHajService.com

عَلٰى مَا قَضَيْتَ نَسْتَغْفِرُكَ وَنَتُوْبُ إِلَيْكَ. رَبِّ أَوْزِعْنِيْ أَنْ أَشْكُرَ نِعْمَتَكَ الَّتِيْ أَنْعَمْتَ عَلَيَّ وَعَلٰى وَالِدَيَّ وَأَنْ أَعْمَلَ صَالِحًا تَرْضَاهُ وَأَدْخِلْنِيْ بِرَحْمَتِكَ فِيْ عِبَادِكَ الصَّالِحِيْنَ.

اَللّٰهُمَّ حَبِّبْ إِلَيْنَا الْإِيْمَانَ وَزَيِّنْهُ فِيْ قُلُوْبِنَا وَكَرِّهْ إِلَيْنَا الْكُفْرَ وَالْفُسُوْقَ وَالْعِصْيَانَ وَاجْعَلْنَا مِنَ الرَّاشِدِيْنَ. اَللّٰهُمَّ إِنَّ قُلُوْبَنَا وَنَوَاصِيَنَا بِيَدِكَ لَمْ تُمَلِّكْنَا مِنْهَا شَيْئًا فَإِذَا فَعَلْتَ ذٰلِكَ بِنَا فَكُنْ أَنْتَ وَلِيَّنَا وَاهْدِنَا إِلٰى سَوَاءِ السَّبِيْلِ.



www.DheenHajService.com

اَللّٰهُمَّ اقْسِمْ لَنَا مِنْ خَشْيَتِكَ مَا تَحُوْلُ بَيْنَنَا

وَبَيْنَ مَعَاصِيْكَ وَمِنْ طَاعَتِكَ مَا تُبَلِّغُنَا بِهِ

جَنَّتَكَ وَمِنَ الْيَقِيْنِ مَا تُهَوِّنُ بِهِ عَلَيْنَا مَصَائِبُ

الدُّنْيَا وَ مَتِّعْنَا بِأَسْمَاعِنَا وَأَبْصَارِنَا وَقُوَّتِنَا مَا

أَحْيَيْتَنَا وَاجْعَلْهُ الْوَارِثَ مِنَّا وَاجْعَلْ ثَأْرَنَا عَلٰى

مَنْ ظَلَمَنَا وَانْصُرْنَا عَلٰى مَنْ عَادَانَا وَلاَ تَجْعَلْ

مُصِيْبَتَنَا فِيْ دِيْنِنَا وَلاَ تَجْعَلِ الدُّنْيَا أَكْبَرَ هَمِّنَا

وَلاَ مَبْلَغَ عِلْمِنَا وَلاَ تُسَلِّطْ عَلَيْنَا مَنْ لَا يَرْحَمُنَا.

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ وَأَعُوْذُ

بِكَ مِنَ الْعَجْزِ وَالْكَسَلِ وَأَعُوْذُ بِكَ مِنَ الْجُبْنِ



www.DheenHajService.com

وَالْبُخْلِ وَأَعُوْذُ بِكَ مِنْ غَلَبَةِ الدَّيْنِ وَقَهْرِ
الرِّجَالِ. اَللّٰهُمَّ أَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ النَّارِ
وَفِتْنَةِ الْقَبْرِ وَ عَذَابِ الْقَبْرِ وَشَرِّ فِتْنَةِ الْغِنِيِّ
وَشَرِّ فِتْنَةِ الْفَقْرِ.

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْقَسْوَةِ وَالْغَفْلَةِ
وَالْعَيْلَةِ وَالذِّلَّةِ وَالْمَسْكَنَةِ وَأَعُوْذُ بِكَ مِنَ
الْفَقْرِ وَالْكُفْرِ وَالْفُسُوْقِ وَالشِّقَاقِ وَالسُّمْعَةِ
وَالرِّيَاءِ وَأَعُوْذُ بِكَ مِنَ الصَّمَمِ وَالْبَكَمِ
وَالْبَرَصِ وَالْجُنُوْنِ وَالْجُذَامِ وَسَيِّءِ الْأَسْقَامِ.

www.DheenHajService.com

اَللّٰهُمَّ اجْعَلْ فِيْ قَلْبِيْ نُوْرًا وَفِيْ بَصَرِيْ نُوْرًا وَفِيْ سَمْعِيْ نُوْرًا وَعَنْ يَمِيْنِيْ نُوْرًا وَعَنْ يَسَارِيْ نُوْرًا وَمِنْ فَوْقِيْ نُوْرًا وَمِنْ تَحْتِيْ نُوْرًا وَمِنْ أَمَامِيْ نُوْرًا وَمِنْ خَلْفِيْ نُوْرًا اَللّٰهُمَّ أَعْطِنِيْ نُوْرًا وَاجْعَلْ لِيْ نُوْرًا وَفِيْ عَصَبِيْ نُوْرًا وَفِيْ لَحْمِيْ نُوْرًا وَفِيْ دَمِيْ نُوْرًا وَفِيْ شَعْرِيْ نُوْرًا وَفِيْ بَشَرِيْ نُوْرًا وَفِيْ لِسَانِيْ نُوْرًا وَاجْعَلْ فِيْ نَفْسِيْ نُوْرًا وَأَعْظِمْ لِيْ نُوْرًا وَاجْعَلْنِيْ نُوْرًا اَللّٰهُمَّ طَهِّرْ قَلْبِيْ مِنَ النِّفَاقِ وَعَمَلِيْ مِنَ الرِّيَاءِ وَلِسَانِيْ مِنَ الْكَذِبِ وعَيْنِيْ مِنَ الْخِيَانَةِ فَإِنَّكَ تَعْلَمُ خَائِنَةَ الأَعْيُنِ وَمَا تُخْفِي الصُّدُوْرُ.



www.DheenHajService.com

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ تَوْفِيْقَ أَهْلِ الْهُدٰى وَأَعْمَالَ أَهْلِ الْيَقِيْنِ وَمُنَاصَحَةَ أَهْلِ التَّوْبَةِ وَعَزْمَ أَهْلِ الصَّبْرِ وَجِدَّ أَهْلِ الْخَشْيَةِ وَطَلَبَ أَهْلِ الرَّغْبَةِ وَتَعَبُّدَ أَهْلِ الْوَرَعِ وَعِرْفَانَ أَهْلِ الْعِلْمِ حَتّٰى أَلْقَاكَ. اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ وَارْحَمْنِيْ وَعَافِنِيْ وَاهْدِنِيْ وَارْزُقْنِيْ وَاجْبُرْنِيْ وَارْفَعْنِيْ.

رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً إِنَّكَ أَنْتَ الْوَهَّابُ. اَللّٰهُمَّ لَا قَابِضَ لِمَا بَسَطْتَ وَلَا بَاسِطَ لِمَا قَبَضْتَ وَلَا هَادِيَ لِمَا أَضْلَلْتَ وَلَا مُضِلَّ لِمَنْ هَدَيْتَ وَلَا مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلَا

www.DheenHajService.com

مَانِعَ لِمَا أَعْطَيْتَ وَلاَ مُقَرِّبَ لِمَا بَاعَدْتَ وَلاَ مُبَاعِدَ لِمَا قَرَّبْتَ اَللّٰهُمَّ ابْسُطْ عَلَيْنَا مِنْ بَرَكَاتِكَ وَرَحْمَتِكَ وَفَضْلِكَ وَرِزْقِكَ.

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ النَّعِيْمَ الْمُقِيْمَ الَّذِيْ لاَ يَحُوْلُ وَلاَ يَزُوْلُ رَبِّ اجْعَلْنِيْ مُقِيْمَ الصَّلَاةِ وَمِنْ ذُرِّيَّتِيْ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَاءِ. رَبَّنَا اغْفِرْ لِيْ وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ. رَبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِيْ صَغِيْرًا. رَبَّنَا اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ. وَصَلَّى اللهُ تَعَالٰى وَسَلَّمَ عَلٰى خَيْرِ خَلْقِهٖ سَيِّدِنَا مُحَمَّدٍ وَاٰلِهٖ وَاَصْحَابِهٖ اَجْمَعِيْنَ.

www.DheenHajService.com

# அரஃபா துஆவின் பொருள்

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனு மாகிய அல்லாஹ்வின் திரு நாமம் கொண்டு பிரார்த்திக்கிறேன். புகழனைத்தும் சர்வ உலகத்தினரையும் படைத்து பரிபாலித்து, இரட்சித்து வருகின்ற அல்லாஹ்வுக்கே உரியன. (அவன்) உலகினில் அனைவருக்கும் அருள் புரிகிறவன்; மறுமையில் முஃமின்களுக்கு மட்டும் அருள்புரிகிறவன். (அவன்) தீர்ப்பு நாளின் அதிபதி.

யா அல்லாஹ்! நாங்கள் உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவி தேடுகிறோம். எங்களை நேரான வழியில் நடத்துவாயாக! எவரின் மீது நீ அருள் புரிந்துள்ளாயோ அத்தகையவரின் வழியில் (நடத்துவாயாக! அது) உன் கோபத்திற் குள்ளானோர் வழியுமல்ல; நேர் வழி தவறியோரின் வழியுமல்ல. (ஏற்றுக் கொள்வாயாக! ஆமீன்!!)

இதன் பால் எங்களுக்கு நேர்வழி காட்டிய அல்லாஹ்வுக்கே எல்லா புகழும். அல்லாஹ் எங்களுக்கு நேர்வழி காட்டியிருக்காவிட்டால் நாங்கள் நேர்வழி பெற்றவர்களாக ஆகியிருக்க மாட்டோம். யா அல்லாஹ்! நபி இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாம் அவர்களின் மீதும், அவர்களுடைய



www.DheenHajService.com

குடும்பத்தினர் மீதும் நீ ஸலவாத்து அருளியது போல், எங்கள் தலைவர் முஹம்மது (ஸல்) அவர்களின் மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மீதும் நீ சலவாத்தினை அருள்வாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவன்; மேன்மைக்குரியவன்.

யா அல்லாஹ்! நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மீதும் அவர்களுடைய குடும்பத்தினர் மீதும் நீ பரகத்துச் செய்தது போல், எங்கள் தலைவர் முஹம்மது (ஸல்) அவர்களின் மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மீதும் நீ பரகத்துச் செய்திடுவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவன்; மேன்மைக்குரியவன்.

எங்கள் இரட்சகனே எங்களிடமிருந்து (இதனை) நீ ஏற்றுக்கொள்வாயாக. நிச்சயமாக நீ (எங்கள் வேண்டுகோளைச்) செவியேற்கிறவன்; (எங்கள் நிலைகளை) நன்கு அறிகின்றவன். எங்கள் தவ்பாவை பாவமீட்சியை ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீ தவ்பாவை ஏற்றுக் கொள்கிறவன்; அருள்புரிகிறவன்.

யா அல்லாஹ்! நீ எனக்கு வசப்படுத்திக் கொடுத்த ஒரு காரியத்தின் மீது நீ எனக்கு நல்லுதவி செய்துவிட்டாய். உன் பேருபகாரத்தினால் உன்னுடைய கலீல் இப்ராஹீம் (அலை)


www.DheenHajService.com

அவர்களின் நடைமுறையை பின்பற்றியதற்காகவும், உன் படைப்பினங்களில் மிகச் சிறந்த எங்கள் தலைவர் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றியதற்காகவும் உன் திரு வீட்டை சந்திப்பதின் பக்கமும், இந்த மகத்தான புனித இடத்தில் தங்குவதற்கும் நீ என்னைக் கொண்டுவந்து சேர்த்துவிட்டாய்.

(உன் விருந்தாளியாக நான் வந்திருக்கிறேன்.) விருந்தாளி ஒவ்வொருவருக்கும் விருந்தளிப்பதும், தூதுக் குழுவினர் ஒவ்வொருவருக்கும் அன்பளிப்பு வழங்குவதும், சந்திக்க வருபவர் ஒவ்வொரு வரையும் கண்ணியப்படுத்துவதும், கேட்பவர் ஒவ்வொருவருக்கும் கொடுப்பதும், ஆதரவுவைத்த ஒவ்வொருவருக்கும் நன்மை வழங்குவதும், உன்னிடம் உள்ளதை வேண்டுகின்ற ஒவ்வொரு வருக்கும் நற்பிரதிபலனை வழங்குவதும், உன் பக்கம் ஆசை கொள்கின்ற ஒவ்வொருவருக்கும் நெருக்கம் அளிப்பதும், உன் பக்கம் முன்னோக்குகின்ற ஒவ்வொருவருக்கும் பேருப காரம் புரிவதும் உன் உயரிய பண்புகளாகும்.

யா அல்லாஹ்! உன்னிடத்தில் உள்ளதை ஆதரவு வைத்த நிலையில் இந்த மகத்தான இடத்தில்

www.DheenHajService.com

நாங்கள் தங்கியுள்ளோம். நாங்கள் உன்னிடம் வைத்துள்ள ஆதரவை நஷ்டமாக்கிவிடாதே. எங்களின் எஜமானனே, ஒவ்வொரு பொருளும் அவனுடைய கண்ணியத்திற்கு அடிபணிந்து விட்ட ஒருவனே, அவனுடைய மகத்துவத்திற்கு முகங்களெல்லாம் பணிந்து விட்ட ஒருவனே!

யா அல்லாஹ்! உன் பக்கம் நாங்கள் புறப்பட்டு வந்துள்ளோம். உன் முற்றத்தில் எங்கள் வாகனங்களை இறக்கியுள்ளோம். உன்னையே நாங்கள் ஆதரவு வைத்துள்ளோம். உன்னிடம் உள்ளதை நாங்கள் தேடுகிறோம். உன் பேருபகாரத்தை வேண்டுகிறோம். உன் அருளை ஆதரவு வைத்துள்ளோம். உன்னுடைய தண்டனையை பயந்துள்ளோம். உன்னுடைய புனித வீட்டை ஹஜ் செய்துள்ளோம்.

கேட்கக் கூடியவர்களின் தேவைகளுக்கு உரிமையாளனே, கேட்காதவரின் இதயங்களை அறிந்துள்ளவனே, அவனுடன் அழைக்கப்படும் எந்த இரட்சகனும் ஆதரவு வைக்கப்படும் எந்த நாயனும் இல்லாத ஒருவனே, பயப்படும் அளவுக்கு அவனுக்கு மேல் எவ்வித படைப்பாளனும் இல்லாதவனே, பதவி கொடுக்கப்படும் எந்த

www.DheenHajService.com

அமைச்சரும் இல்லாதவனே, இலஞ்சம் கொடுக்கப் படும் எந்த பாதுகாப்பாளனும் இல்லாதவனே,

கேட்பதினால் தயாளத்தையும், கொடையையும், தேவைகள் அதிகமாவதினால் கருணையும், பேருப காரத்தையும் அதிகப்படுத்துகின்ற ஒருவனே! அவன் முன்னிலையில் பலவிதமான மொழிகளை கொண்டுள்ள சப்தங்கள் இரைந்துக் கொண்டிருக் கின்ற ஒருவனே! அனைவரும் உன்னிடத்தில் தங்களின் தேவைகளை கேட்டுக் கொண்டிருக் கின்றனர். அருளாளர்களுக்கெல்லாம் மாபெரும் அருளாளனே! நான் உன் அருளின் பொருட்டால் சொர்கத்தைக்கொண்டு வெற்றியையும், நரகத்தை விட்டும் ஈடேறத்தையும் உன்னிடம் வேண்டுகிறேன்.

யா அல்லாஹ்! புகழனைத்தும் உனக்கே சொந்தம், நன்றி அனைத்தும் உனக்கே சொந்தம், ஆட்சி அனைத்தும் உனக்கே சொந்தம், படைப்புகள் அனைத்தும் உனக்கே சொந்தம், நன்மைகள் அனைத்தும் உன் வசமே உள்ளன. காரியங்கள் அனைத்தும் உன் பக்கமே மீளும். (எனவே) நன்மைகள் அனைத்திலிருந்தும் உன்னிடம் நான் வேண்டுகிறேன். தீமைகள் அனைத்திலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.

www.DheenHajService.com

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் கேட்பதில் சிறந்ததையும், துஆவில் சிறந்ததையும், வெற்றியில் சிறந்ததையும், வாழ்வில் சிறந்ததையும், மரணத்தில் சிறந்ததையும் உன்னிடம் வேண்டுகிறேன். நீ என்னை தீனில் உறுதிப்படுத்துவாயாக! என் (நன்மையின்) எடையை கனமாக்கிவிடுவாயாக! என் ஈமானை உறுதிப்படுத்துவாயாக! என் பதவியினை உயர்த்திவிடுவாயாக! என் தொழுகையை ஏற்றுக் கொள்வாயாக! என் தவறுகளை மன்னித்து விடுவாயாக! சொர்கத்தில் உயர்ந்த பதவிகளை உன்னிடம் நான் வேண்டுகிறேன். இந்த துஆவை ஏற்றுக் கொள்வாயாக.

யா அல்லாஹ்! உன்னுடைய நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உன்னிடம் எந்த நன்மைகளை கேட்டார்களோ அதனை உன்னிடம் நாங்கள் வேண்டுகிறோம். உன்னுடைய நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எந்த தீமைகளை விட்டு உன்னிடம் பாதுகாப்பு தேடினார்களோ அதை விட்டு உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறோம். நீயே உதவி தேடப்படுகிறவன். (நாங்கள்) நோக்கத்தை அடையுதல் உன் மீதே இருக்கிறது.



www.DheenHajService.com

தீமைகளை விட்டும் திரும்புதலும், நன்மைகள் செய்ய சக்தியும் அல்லாஹ்வின் உதவியைக் கொண்டே தவிர இல்லை.

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடம் இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்பையும், சுகத்தையும், நிரந்தரமான நலத்தையும், சொர்கத்தைக் கொண்டு வெற்றியையும், நரகத்தை விட்டுப் பாதுகாப்பையும் வேண்டுகிறேன்.

எங்கள் இரட்சகனே! நாங்கள் மறந்து விட்டாலும், தவறிவிட்டாலும் எங்களை நீ (குற்றம்) பிடித்து விடாதே. எங்கள் இரட்சகனே! எங்களுக்கு முன் இருந்தவர்களின் மீது (கடினமான சுமையை) நீ சுமத்தியது போன்று எங்களின் மீது சுமையை சுமத்தி விடாதே! எங்களை விட்டும் (பாவங்களை) அழித்துவிடுவாயாக! எங்களை மன்னித்துவிடு வாயாக! எங்களுக்கு அருள்புரிவாயாக!

நீயே எங்கள் எஜமான், எனவே உன்னை நிராகரிக்கின்ற கூட்டத்திற்கு எதிராக எங்களுக்கு நீ உதவி செய்வாயாக. சாந்தமானவனும், தயாளனு மாகிய அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற் குரியவன் வேறுயாருமில்லை. மகத்தான அர்ஷுடைய அல்லாஹ் மகாத்தூய்மையானவன். சர்வ உலகத்தினரையும் படைத்து இரட்சித்து பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்.

www.DheenHajService.com

யா அல்லாஹ்! உன்னுடைய ரஹ்மத்தை உண்டாக்கித் தருபவற்றையும், உன்னுடைய மன்னிப்பின் உறுதிமிக்க காரணிகளையும், பாவங்கள் அனைத்தை விட்டும் பாதுகாப்பையும், நன்மைகள் அனைத்திலிருந்து கொள்ளைக் கொள் வதையும், தீமைகள் அனைத்தையும் விட்டும் நீங்கி இருப்பதையும் உன்னிடம் நான் வேண்டுகிறேன்.

யா அல்லாஹ்! எந்த பாவத்தையும் நீ எனக்கு மன்னிக்காமலும், எந்த கவலையையும் நீ அதனை மகிழ்ச்சி ஆக்காமலும், எந்த துன்பத்தையும் நீ அதனை விடுவிக்காமலும், எந்த இடறையும் நீ அதனை நீக்காமலும், உனக்கு பொருத்தமான (என்னுடைய) எந்த தேவையையும் நீ அதனை நிறைவேற்றாமலும் விட்டு விடாதே! கருணையாளர் களிலெல்லாம் மாபெரும் கருணையாளனே!

யா அல்லாஹ்! நீ நேர்வழி நடத்தாட்டியவர் களுடன் என்னையும் நேர்வழியில் நடத்தாட்டு வாயாக! நீ சுகமளித்தவர்களுடன் எனக்கும் சுகமளிப்பாயாக! நீ பொறுப்பேற்றுக் கொள்வாயாக!

நீ (எனக்கு) கொடுத்தவற்றில் பரகத்துச் செய்வாயாக! நீ விதித்துள்ள தீமையை விட்டும் என்னை காத்தருள்வாயாக! நிச்சயமாக நீயே தீர்ப்பளிக்கிறாய். உன் மீது (பிறரால்) தீர்ப்



www.DheenHajService.com

பளிக்கப்படமாட்டாது. நீ பொறுப் பேற்றுக்கொண்ட ஒருவர் கேவலப்படமாட்டார். நீ விரோதித்துக் கொண்ட ஒருவர் கண்ணியமடையமாட்டார். நீ பரக்கத்துடையவனாக ஆகிவிட்டாய். எங்கள் இரட்சகனே நீ உயர்வடைந்துவிட்டாய். நாங்கள் உன்னிடம் பாவமன்னிப்பு தேடுகிறோம். தவ்பா செய்து உன் பால் மீளுகிறோம்.

என்னுடைய இரட்சகனே! என் மீதும் என் பெற்றோர் மீதும் நீ செய்துள்ள அருள் கொடைக்கு நான் நன்றி செலுத்துவதற்கும் நீ பொருந்திக் கொள்கிற நற்செயலை நான் செய்வதற்கும் எனக்கு நீ நல்லுணர்வை அருள்வாயாக! என் சந்ததியில் எனக்கு நல்லிணக்கத்தை உண்டாக்குவாயாக. நிச்சயமாக நான் உன் பால் தவ்பா செய்து மீண்டு விட்டேன். நான் உனக்கு பணிந்து வாழ்வோரில் உள்ளவனாக இருக்கிறேன்.

யா அல்லாஹ்! எங்களுக்கு ஈமானைப் பிரியமாக்கி வைத்து, அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக்கி வைப்பாயாக. எங்களுக்கு குஃப்ரையும், பாவங்களையும், (உனக்கு) மாறு செய்வதையும் வெறுப்பாக்கி வைப்பாயாக! எங்களை நேர்வழியாளர்களில் உள்ளவர்களாக ஆக்கி வைப்பாயாக!



www.DheenHajService.com

யா அல்லாஹ்! நிச்சயமாக எங்களுடைய உள்ளங்களும், எங்களுடைய முன்னெற்றி முடிகளும், எங்களுடைய உடலுறுப்புகளும் உன் வசத்திலேயே இருக்கின்றன. இவற்றிலிருந்து எதனையும் எங்களுக்கு நீ உரிமையாக்கவில்லை. எனவே, இவற்றை எங்களிடம் நீ செயல் படுத்தினால். நீ எங்களுக்கு பொறுப்பாளனாக ஆகிவிடுவாயாக. நேரான வழியின் பால் எங்களை வழி நடத்துவாயாக.

யா அல்லாஹ்! எங்களுக்கும் எங்களுடைய பாவங்களுக்குமிடையே எதைக் கொண்டு திரையிடுவாயோ அத்தகைய உன்னுடைய அச்சத்தையும், எதன் மூலம் உன்னுடைய சொர்கத்தில் எங்களை நீ சேர்த்து வைப்பாயோ அத்தகைய வழிபடுதலையும், எதன் மூலம் உலக துன்பங்களை எங்களுக்கு நீ இலேசாக்குவாயோ அத்தகைய உறுதியையும் எங்களுக்கு நீ பங்கிட்டு அருள்வாயாக! எங்களை நீ வாழவைக்கும் காலத்தில் எங்களுடைய செவிகளின் மூலமும், எங்களுடைய கண்களின் மூலமும், எங்களுடைய சக்தியின் மூலமும் எங்களுக்கு சுகமளிப்பாயாக! அதனை எங்களிலிருந்து வாரிசாக ஆக்குவாயாக! எங்களின் பழிவாங்குதலை எங்களுக்கு அநியாயம்

www.DheenHajService.com

செய்தவர்களின் மீது ஆக்கிடுவாயாக! எங்களின் எதிரிகளுக்கு எதிராக எங்களுக்கு நீ உதவி செய்திடுவாயாக! எங்களுடைய துன்பத்தை எங்களுடைய தீனில் நீ ஆக்கிவிடாதே! உலகத்தை எங்களின் முக்கிய நோக்கமாகவும், எங்களுடைய அறிவின் எல்லையாகவும் ஆக்கிவிடாதே! எங்கள் மீது இரக்கமில்லாதவரை எங்களின் மீது சாட்டிவிடாதே.

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் கவலை, சஞ்சலம், இயலாமை, சோம்பல், கோழைத்தனம், கஞ்சத்தனம், கடன் மிகைத்தல் மற்றும் மனிதர்களின் அடக்குமுறை ஆகியவற்றை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன்.

யா அல்லாஹ்! நரகத்தின் வேதனை, நரகத்தின் குழப்பம், கப்ரின் குழப்பம், கப்ரின் வேதனை, செல்வத்தினால் ஏற்படும் குழப்பத்தின் தீமை மற்றும் வறுமையினால் ஏற்படும் குழப்பத்தின் தீமை ஆகியவற்றை விட்டும் நிச்சயமாக உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். இன்னும் மனஇறுக்கம், மறதி, குடும்ப பாரம், இழிவு மற்றும் கேவலம் ஆகியவற்றை விட்டும் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். இன்னும் வறுமை, நிராகரிப்பு, பாவம், பிளவுண்டாக்குதல், பிரபலம்



www.DreemHajService.com

தேடுதல், முகஸ்துதி ஆகியவற்றை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். மேலும் செவிடு, ஊமை, வெண்குஷ்டம், பைத்தியம், கருங்குஷ்டம் மற்றும் தீய நோய்கள் அனைத்தையும் விட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

யா அல்லாஹ்! என்னுடைய உள்ளத்தில் ஒளியை, என் பார்வையில் ஒளியை, என் செவியில் ஒளியை, என் வலப்பக்கத்தில் ஒளியை, என் இடப்பக்கத்தில் ஒளியை, எனக்கு பின்னால் ஒளியை, எனக்கு முன்னால் ஒளியை, என் மேற்புரத்தில் ஒளியை, என் கீழ்ப் பகுதியில் ஒளியை ஆக்குவாயாக! யா அல்லாஹ்! எனக்கு ஒளியை வழங்குவாயாக. எனக்கு ஒளியை உண்டாக்குவாயாக! என்னுடைய நரம்பில் ஒளியை, என்னுடைய சதையில் ஒளியை, என் இரத்தத்தில் ஒளியை, என் முடியில் ஒளியை, என் மேனியில் ஒளியை, என் நாவில் ஒளியை, என் ஆன்மாவில் ஒளியை ஏற்படுத்துவாயாக! எனக்கு ஒளியை பிரமாண்ட மானதாக்குவாயாக! என்னையே ஒளியாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! என் இதயத்தை நயவஞ்சக தனத்தை விட்டும், என் செயலை முகஸ்துதியை

www.DheenHajService.com

விட்டும், என் நாவை பொய் கூறுவதை விட்டும், என் கண்ணை சதி செய்வதை விட்டும் பரிசுத்தமாக்கி வைத்திடுவாயாக. நிச்சயமாக நீ கண்களின் சதியையும், நெஞ்சங்கள் மறைத்து வைப்பவற்றையும் நன்கு அறிந்திடுவாய்.

யா அல்லாஹ்! நான் உன்னை சந்திக்கும் வரை நேர்வழியார்களின் நல்லுதவியையும், உறுதி உள்ளவர்களின் செயல்களையும், தவ்பா உடையவர்களின் நல்லுபதேசத்தையும், பொறுமை யுடையவர்களின் உறுதியையும், இறை பயமுள்ள வர்களின் முயற்சியையும், ஆர்வமுள்ளோரின் தேட்டத்தையும், பேணுதலுடையவர்களின் வணக் கத்தையும், கல்வியாளர்களின் ஞானத்தையும் நான் உன்னிடம் வேண்டுகிறேன்.

யா அல்லாஹ்! என்னை மன்னிப்பாயாக! எனக்கு அருள்புரிவாயாக! எனக்கு சுகமளிப் பாயாக! என்னை நேர்வழியில் நடத்தாட்டுவாயாக. எனக்கு உணவளிப்பாயாக! என்னுடைய குறைகளை (போக்கி) நிறைவாக்குவாயாக! என்னை உயர்வுபடுத்துவாயாக!

எங்கள் இரட்சகனே! நீ எங்களை நேர்வழியில் நடத்தாட்டிய பின் எங்களின் உள்ளங்களை சருக்கச் செய்துவிடாதே. இன்னும் உன் புறத்திலிருந்து

ரஹ்மத்தை எங்களுக்கு அன்பளிப்பாயாக! நிச்சயமாக நீயே பெரும் கொடையாளன்.

யா அல்லாஹ்! புகழனைத்தும் உனக்கே சொந்தம். நீ விரிவாக்கியதை சுருக்குபவர் எவரும் கிடையாது. நீ வழிதவறச் செய்தவருக்கு நேர்வழி காட்டுபவர் யாருமில்லை. நீ நேர்வழி நடத்தியவரை வழிதவறச் செய்பவர் யாருமில்லை. நீ தடுத்ததை கொடுப்பவர் யாருமில்லை. நீ கொடுத்ததை தடுப்பவர் யாருமில்லை. நீ தூரமாக்கி வைத்ததை நெருக்கமாக்கிவைப்பவர் யாருமில்லை. நீ நெருக்கமாக்கி வைத்ததை தூரமாக்கி வைப்பவர் யாருமில்லை.

யா அல்லாஹ்! உன்னுடைய பரகத்துகள், உன் ரஹ்மத், உன் கருணை, உன் இரணம் ஆகியவற்றிலிருந்து எங்களுக்கு விரிவாக்கி வைத்திடுவாயாக. யா அல்லாஹ்! நிச்சயமாக நான், மாறிடாத, நீங்கிடாத, நிரந்தரமான பாக்கியத்தை உன்னிடம் வேண்டுகிறேன்.

என்னுடைய இரட்சகனே! என்னையும், என்னுடைய சந்ததிகளையும் தொழுகையை நிலை நிறுத்துபவர்களாக ஆக்கிவைப்பாயாக!

எங்களுடைய இரட்சகனே! இந்த துஆவை ஏற்றுக்கொள்வாயாக. எங்களுடைய இரட்சகனே



www.DheenHajService.com

கேள்வி கணக்கு கேட்கும் நாளில் என்னையும் என் பெற்றோரையும், முஃமின்களையும் மன்னித் தருள்வாயாக. அவ்விருவரும் நான் சிறுவனாக இருக்கும் போது என்னை வளர்த்தது போல் அவ்விருவருக்கும் அருள்புரிவாயாக.

எங்கள் இரட்சகனே! இவ்வுலகில் எங்களுக்கு நன்மையான வாழ்வையும் மறுமையில் நன்மையான வாழ்வையும் தந்தருள்வாயாக. நரக வேதனையை விட்டும் எங்களை காத்தருள்வாயாக. நபி (ஸல்) அவர்களின் மீது, அவர்களின் குடும்பத்தினர், தோழர்கள், மற்றும் எல்லோரின் மீதும் உன் கருணையை பொழிவாயாக!

## ஸய்யிதுல் இஸ்திஃபார்

اَللّٰهُمَّ أَنْتَ رَبِّيْ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ خَلَقْتَنِيْ وَأَنَا عَبْدُكَ

وَأَنَا عَلٰى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ أَعُوْذُ بِكَ مِنْ

شَرِّ مَا صَنَعْتُ أَبُوْءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَأَبُوْءُ لَكَ

بِذَنْبِيْ فَاغْفِرْ لِيْ فَإِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوْبَ إِلَّا أَنْتَ

www.DheenHajService.com

யா அல்லாஹ்! நீயே என்னுடைய இரட்சகன். வணக்கத்திற்குரிய நாயன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. நீ என்னை படைத்தாய். நான் உன்னுடைய அடிமை. நான் என்னால் இயன்ற அளவு உன்னுடைய உடன்படிக்கையின் மீதும், உன்னுடைய வாக்கின் மீதும் செயலாற்றுபவனாக இருக்கிறேன். நான் செய்திட்ட தீமையை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். என் மீது (நீ செய்து)ள்ள உன் அருட்கொடையை உன்னிடம் நான் ஒப்புக்கொள்கிறேன். இன்னும் என்னுடைய பாவத்தையும் உன்னிடம் நான் ஒப்புக்கொள் கிறேன். எனவே என்னை நீ மன்னித்திடுவாயாக! நிச்சயமாக உன்னைத் தவிர (வேறு எவரும்) பாவங்களை மன்னிக்கமாட்டார்.

اَللّٰهُمَّ ارْحَمْنِيْ بِتَرْكِ الْمَعَاصِيْ أَبَدًا مَا أَبْقَيْتَنِيْ وَارْحَمْنِيْ أَنْ أَتَكَلَّفَ مَا لَا يَعْنِيْنِيْ وَارْزُقْنِيْ حُسْنَ النَّظَرِ فِيْمَا يُرْضِيْكَ عَنِّيْ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

யா அல்லாஹ்! என்னை நீ (இவ்வுலகில்) தரிபடுத்தி வைத்திருக்கும் காலமெல்லாம்



www.DheenHajService.com

எப்பொழுதும் பாவங்களை விட்டுவிடுவதற்கு எனக்கு நீ அருள்புரிவாயாக! எனக்கு தேவையில்லாத காரியத்திற்கு நான் சிரமமெடுத்துக் கொள்வதை விட்டும் நான் நீங்கிட நீ எனக்கு அருள்புரிவாயாக! என் சார்பாக நீ பொருந்திக் கொள்கிற விஷயத்தில் அழகிய பார்வையை எனக்கு வழங்கிடுவாயாக! அருளாளர்களுக் கெல்லாம் மாபெரும் அருளாளனே!

رَبِّ اَعِنِّيْ وَلَا تُعِنْ عَلَيَّ وَانْصُرْنِيْ وَلَا تَنْصُرْ عَلَيَّ

وَأَمْكُرْنِيْ وَلَا تَمْكُرْ عَلَيَّ وَاهْدِنِيْ وَيَسِّرِ الْهُدٰى لِيْ

وَانْصُرْنِيْ عَلٰى مَنْ بَغٰى عَلَيَّ اَللّٰهُمَّ اجْعَلْنِيْ لَكَ

شَكَّارًا لَكَ ذَكَّارًا لَكَ رَهَّابًا لَكَ مِطْوَاعًا لَكَ مُخْبِتًا

إِلَيْكَ أَوَّاهًا مُّنِيْبًا. رَبِّ تَقَبَّلْ تَوْبَتِيْ وَاغْسِلْ

حَوْجَتِيْ وَأَجِبْ دَعْوَتِيْ وَثَبِّتْ حُجَّتِيْ وَاهْدِ قَلْبِيْ

وَسَدِّدْ لِسَانِيْ وَأَسْلُلْ سَخِيْمَةَ قَلْبِيْ

www.BheenHajService.com

என்னுடைய இரட்சகனே! எனக்கு சாதகமாக துணை செய்திடுவாயாக! எனக்கு பாதகமாக துணை செய்யாதிருப்பாயாக! எனக்கு சாதகமாக உதவி செய்திடுவாயாக! எனக்கு பாதகமாக உதவி செய்யாதிருப்பாயாக! எனக்கு சாதகமாக நீ சூழ்ச்சி செய்திடுவாயாக. என்னை நேர்வழியில் நடத்தாட்டுவாயாக! நேர்வழியை எனக்கு எளிதாக்கி வைப்பாயாக!

என் மீது அக்கிரமம் புரிபவருக்கு எதிராக எனக்கு நீ உதவி செய்வாயாக! என்னுடைய ரப்பே! உனக்கு அதிகம் நன்றி செலுத்துகிறவனாக, உன்னை அதிகம் திக்ரு செய்கிறவனாக, உன்னை அதிகம் பயப்படுகிறவனாக, உனக்கு அதிகம் வழிபடுகிறவனாக, உன்னை அஞ்சுகிறவனாக, உன் பக்கமே மீளுகிறவனாக என்னை ஆக்கியருள் வாயாக!

என்னுடைய ரப்பே! என் தவ்பாவை ஏற்றுக் கொள்வாயாக! என் குற்றத்தை கழுகிவிடுவாயாக! என்னுடைய இறைஞ்சுதலுக்கு பதிலளிப்பாயாக. என்னுடைய ஆதாரத்தை உறுதிப்படுத்துவாயாக! என் உள்ளத்திற்கு நேர்வழி காண்பிப்பாயாக! என் நாவை நேர்மையானதாக்கிவைப்பாயாக! என் உள்ளத்தின் குரோதத்தை அகற்றுவாயாக!

رَبَّنَا اصْرِفْ عَنَّا عَذَابَ جَهَنَّمَ إِنَّ عَذَابَهَا كَانَ غَرَامًا إِنَّهَا سَاءَتْ مُسْتَقَرًّا وَّمُقَامًا

எங்கள் இரட்சகனே! நரகத்தின் வேதனையை எங்களை விட்டும் நீ திருப்பிவிடுவாயாக! நிச்சயமாக அதன் வேதனை நிலையானதாக ஆகிவிட்டது. நிச்சயமாக அது சிறிது நேரம் தங்குமிடத்தாலும், நிரந்தரமாக தங்குமிடத்தாலும் கெட்டதாகும்.

رَبَّنَا هَبْ لَنَا مِنْ أَزْوَاجِنَا وَذُرِّيَّاتِنَا قُرَّةَ أَعْيُنٍ وَاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ إِمَامًا

எங்கள் இரட்சகனே, எங்களுடைய மனைவியர்களிலிருந்தும் எங்கள் சந்ததிகளிலிருந்தும் கண்களுக்கு குளிர்ச்சியை எங்களுக்கு வழங்கிடுவாயாக! பயபக்தியாளர்களுக்கு தலைவராக, வழிகாட்டியாக எங்களை நீ ஆக்கிடுவாயாக!

www.DheenHajService.com

رَبَّنَا إِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُّنَادِي لِلْإِيْمَانِ أَنْ
اٰمِنُوْا بِرَبِّكُمْ فَاٰمَنَّا رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا
وَكَفِّرْ عَنَّا سَيِّـَٔاتِنَا وَتَوَفَّنَا مَعَ الْأَبْرَارِ. رَبَّنَا
وَاٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰى رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ
الْقِيَامَةِ إِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ

எங்கள் இரட்சகனே! "நீங்கள் உங்கள் இரட்சகனை ஈமான் கொள்ளுங்கள்." என்று ஈமானின் பால் அழைக்கின்ற ஓர் அழைப்பாளரை நாங்கள் செவியேற்றோம். எனவே, நாங்கள் ஈமான் கொண்டோம். ஆகையால் எங்கள் இரட்சகனே, எங்கள் பாவங்களை மன்னித்திடுவாயாக! எங்களுடைய தீமைகளை எங்களை விட்டும் அழித்திடுவாயாக! நல்லோர்களுடன் எங்களை மரணிக்கச் செய்வாயாக!

www.DheenHajService.com

எங்கள் இரட்சகனே! உன் தூதர்களின் மூலம் எங்களுக்கு நீ வாக்களித்ததை எங்களுக்கு வழங்கிடுவாயாக! கியாமத்து நாளில் எங்களைக் கேவலப்படுத்தி விடாதே நிச்சயமாக நீ வாக்கிற்கு மாறு செய்யமாட்டாய்.

رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِإِخْوَانِنَا الَّذِيْنَ سَبَقُوْنَا

بِالْإِيْمَانِ وَلَا تَجْعَلْ فِيْ قُلُوْبِنَا غِلًّا لِلَّذِيْنَ اٰمَنُوْا

رَبَّنَا إِنَّكَ رَءُوْفٌ رَّحِيْمٌ

எங்கள் இரட்சகனே! எங்களையும், ஈமானில் எங்களுக்கு முந்திவிட்ட எங்கள் சகோதரர்களையும் நீ மன்னிப்பாயாக. ஈமான் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய உள்ளங்களில் குரோதத்தை உண்டாக்கிவிடாதே! எங்கள் இரட்சகனே, நிச்சயமாக நீ இரக்கமுள்ளவன்; அருள்புரிகிறவன்.

رَبَّنَا أَتْمِمْ لَنَا نُوْرَنَا وَاغْفِرْ لَنَا إِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ

قَدِيْرٌ وَصَلَّى اللهُ تَعَالٰى وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ

www.DheenHajService.com

وَاٰلِهٖ وَاَصْحَابِهٖ اَجْمَعِيْنَ. سُبْحَانَ رَبِّكَ رَبِّ

الْعِزَّةِ عَمَّا يَصِفُوْنَ وَسَلَامٌ عَلَى الْمُرْسَلِيْنَ

وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

எங்கள் இரட்சகனே! எங்கள் ஒளியை எங்களுக்கு நிரப்பமாக்கி வைத்து எங்களை மன்னித்திடுவாயாக! நிச்சயமாக நீ எல்லா பொருட்களின் மீதும் சக்தி பெற்றவன்.

அல்லாஹுதஆலா தன் படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் தலைவர் முஹம்மது (ஸல்) அவர்களின் மீதும் அவர்களின் குடும்பத்தார் தோழர்கள் யாவரின் மீதும் அருள்புரிவானாக.

கண்ணியத்திற்குரிய இரட்சகனான உம்முடைய இரட்சகன், அவனுக்கு இணையாக அவர்கள் வர்ணிக்கின்றவைகளை விட்டும் மகாத்தூயவன். ஸலாம் என்னும் சாந்தி, ரசூல்மார்களின் மீது உண்டாவதாக! சர்வ உலகத்தினரையும் படைத்துப் பரிபாலித்து வருகின்ற அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் உரியன.

www.DheenHajService.com

**முஸ்தலிஃபாவின் இரவு லைலதுல் கத்ரைப் போன்று சிறப்புமிக்க இரவாகும், அதில் இறைவனைத் துதிப்பதையும், அவனிடம் பிரார்த்திப்பதையும் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.**

## முஸ்தலிபாவில் ஓதும் துஆ

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَاللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ
اَكْبَرُ وَ لِلّٰهِ الْحَمْدُ. اَللّٰهُمَّ كَمَا أَوْقَفْتَنَا فِيْهِ
وَأَرَيْتَنَا إِيَّاهُ فَوَفِّقْنَا لِذِكْرِكَ كَمَا هَدَيْتَنَا وَاغْفِرْ
لَنَا وَارْحَمْنَا كَمَا وَعَدْتَنَا بِقَوْلِكَ وَقَوْلُكَ الْحَقُّ
فَإِذَا أَفَضْتُمْ مِنْ عَرَفَاتٍ فَاذْكُرُوا اللّٰهَ عِنْدَ
الْمَشْعَرِ الْحَرَامِ وَاذْكُرُوْهُ كَمَا هَدَاكُمْ وَإِنْ

www.DheenHajService.c

كُنْتُمْ مِنْ قَبْلِهِ لَمِنَ الضَّالِّينَ ثُمَّ أَفِيضُوا مِنْ

حَيْثُ أَفَاضَ النَّاسُ وَاسْتَغْفِرُوا اللّٰهَ إِنَّ اللّٰهَ

غَفُوْرٌ رَّحِيْمٌ. اَللّٰهُمَّ اِنَّا جِئْنَاكَ بِجَمْعِنَا

مُتَشَفِّعِيْنَ اِلَيْكَ فِيْ غُفْرَانِ ذُنُوْبِنَا فَلَا تَصْرِفْنَا

مِنْ هٰذَا الْمَشْعَرِ الْعَظِيْمِ اِلَّا فَائِزِيْنَ مُفْلِحِيْنَ

غَيْرَ خَزَايَا وَلَا نَادِمِيْنَ وَلَا ضَالِّيْنَ وَلَا مُضِلِّيْنَ

يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ أَنْ تَرْزُقَنِيْ فِيْ هٰذَا الْمَكَانِ

جَوامِعَ الخَيْرِ كُلِّهِ وَأَنْ تُصْلِحَ شأنِيْ كُلَّهُ وَأَنْ



www.DheenHajService.com

تَصْرِفَ عَنِّيْ اَلشَّرَّ كُلَّهُ فَإِنَّهُ لَا يَفْعَلُ ذٰلِكَ غَيْرُكَ

وَلَا يَجُوْدُ بِهِ إِلَّا أَنْتَ اِنَّكَ اَنْتَ الْجَوَّادُ الْكَرِيْمُ

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ مَغْفِرَةً تُصْلِحُ بِهَا شَأْنِيْ فِي

الدَّارَيْنِ وَارْحَمْنِيْ رَحْمَةً أَسْعَدُ بِهَا فِي الدَّارَيْنِ

وَتُبْ عَلَيَّ تَوْبَةً نَصُوْحًا لَا أَنْكُثُهَا أَبَدًا وَأَلْزِمْنِيْ

اَلْاِسْتِقَامَةَ لَا أَزِيْغُ عَنْهَا أَبَدًا. اَللّٰهُمَّ اِلَيْكَ

تَوَجَّهْتُ فَاجْعَلْ ذَنْبِيْ مَغْفُوْرًا وَسَعْيِيْ مَشْكُوْرًا

وَحَجِّيْ مَبْرُوْرًا وَاغْفِرْلِيْ وَارْحَمْنِيْ يَا اَرْحَمَ

الرَّاحِمِيْنَ

www.DheenHajService.com

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், வலில்லாஹில் ஹம்து.

யா அல்லாஹ்! இந்த இடத்தில் நீ எங்களை தங்க வைத்தது போல், இதனை எங்களுக்கு காட்டித்தந்தது போல், நீ எங்களுக்கு நேர்வழி காண்பித்தது போல் உன்னை திக்ரு செய்வதற்கு எங்களுக்கு நல்லுதவி செய்திடுவாயாக.

“நீங்கள் அரஃபாவிலிருந்து புறப்பட்டு சென்றால் மஷ்அருல்ஹராம் என்ற இடத்தில் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள். அவன் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அவனை திக்ரு செய்யுங்கள். நீங்கள் இதற்கு முன் வழி தவறியவர்களில் உள்ளவர்களாக இருந்தீர்கள். பின்னர் மனிதர்கள் புறப்படுகின்ற விதத்தில் நீங்களும் புறப்படுங்கள். அல்லாஹ்விடம் மன்னிப்பு கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் மன்னிக்கிறவன்; அருள்புரிகிறவன்”. என்று உன் வேதத்தில் நீ கூறியுள்ளாய்.

யா அல்லாஹ்! உன்னுடைய இந்த சொல் சத்தியமானது. உன்னுடைய சொல்லின் மூலம் நீ எங்களுக்கு வாக்களித்துள்ளதைப் போன்று எங்களை மன்னித்து அருள்புரிவாயாக.

யா அல்லாஹ்! எங்களுடைய பாவங்களை மன்னிக்கின்ற விஷயத்தில் உன்னிடம் பரிந்துரையைத் தேடியவர்களாக கூட்டமாக நாங்கள் உன்னிடம் வந்துள்ளோம். மகத்தான இந்த புனித இடத்திலிருந்து வெற்றி பெற்றவர்களாக, கேவலமில்லாதவர்களாக,கைசேதப்படாதவர்களாக, வழிதவறாதவர்களாக, வழிதவறச் செய்யாத வர்களாக எங்களைத் திரும்பச் செய்வாயாக! அருளார்களிலெல்லாம் மாபெரும் அருளாளனே!

யா அல்லாஹ்! இந்த இடத்தின் நன்மைகள் அனைத்தையும் நீ எனக்கு வழங்க வேண்டு மென்றும், என் காரியங்கள் அனைத்தையும் நீ சீராக்கிவிட வேண்டுமென்றும், தீமைகள் அனைத்தையும் என்னை விட்டுத் திருப்பிவிட வேண்டுமென்றும் உன்னிடம் நான் வேண்டுகிறேன். ஏனெனில், உன்னைத் தவிர வேறு எவரும் இதனை செய்ய முடியாது. உன்னைத் தவிர வேறு எவரும் இதனை அன்பளிப்பாகத் தர முடியாது. நிச்சயமாக நீதான் அன்பளிக்கிறவன்; தயாளமானவன்.

யா அல்லாஹ்! என்னை நீ மன்னித்தருள் வாயாக! அதன் மூலம் ஈருலகிலும் என் காரியத்தை நீ சீராக்கி வைப்பாயே அத்தகைய மன்னிப்பை வழங்கிடுவாயாக! எனக்கு அருள்புரி

வாயாக! அதன் மூலம் ஈருலகிலும் நான் நற்பாக்கியம் பெற்றிடுவேனே அத்தகைய அருளை வழங்கிடுவாயாக! என் தவ்பாவை ஏற்றுக் கொள்வாயாக! எப்போதும் அதை நான் முறித்துவிடமாட்டேனே அத்தகைய கலப்பற்ற தவ்பாவை எனக்கு வழங்கிடுவாயாக! மேலும் எப்போதும் நான் சருகிவிடமாட்டேனே அத்தகைய உறுதியான வழியை எனக்கு நீ வழங்கிடுவாயாக!

யா அல்லாஹ்! உன் பக்கமே நான் முன்னோக்கியுள்ளேன். என்னுடைய பாவங்களை மன்னிக்கப்படக் கூடியதாகவும், என் முயற்சிகளை நன்றி கூறப்படக்கூடியதாகவும், என்னுடைய ஹஜ்ஜை ஏற்கப்படக்கூடியதாகவும் ஆக்கியருள் வாயாக. அருளாளர்களிலெல்லாம் மாபெரும் அருளாளனே; என்னை மன்னித்து எனக்கு அருள்புரிவாயாக.

## ஜம்ராவில் கல் எறியும் போது

بِاسْمِ اللهِ اَللهُ اَكْبَرُ رَجْماً لِلشَّيْطَانِ وَرِضًا لِلرَّحْمٰنِ. اَللّٰهُمَّ اجْعَلْهُ حَجًّا مَبْرُوْرًا وَذَنْبًا مَغْفُوْرًا وَسَعْيًا مَشْكُوْرًا

www.DheenHajService.com

அல்லாஹ்வின் திருநாமம் கொண்டு (எறிகிறேன்) அல்லாஹ் மிகப் பெரியவன். ஷைத்தானை விரட்டுவதற்காக, ரஹ்மானை திருப்திபடுத்துவதற்காக, (இதனை எறிகிறேன்)

யா அல்லாஹ்! இதனை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜாகவும், மன்னிக்கப்பட்ட பாவமாகவும், நன்றி செலுத்தப்பட்ட முயற்சியாகவும் ஆக்கியருள் வாயாக.

## குர்பானி கொடுக்கும் போது

إِنِّيْ وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِيْ فَطَرَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ حَنِيْفًا وَمَا أَنَا مِنَ الْمُشْرِكِيْنَ. إِنَّ صَلَاتِيْ وَنُسُكِيْ وَمَحْيَايَ وَمَمَاتِيْ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. لَا شَرِيْكَ لَهُ وَبِذٰلِكَ أُمِرْتُ وَأَنَا أَوَّلُ الْمُسْلِمِيْنَ. اَللّٰهُمَّ تَقَبَّلْ مِنِّيْ هٰذَا النُّسُكَ وَاجْعَلْهُ قُرْبَانًا لِوَجْهِكَ وَعَظِّمْ اَجْرِيْ عَلَيْهَا



www.DheenHajService.com

நிச்சயமாக நான் வானங்களையும் பூமியையும் படைத்தவனின் பால் முற்றிலும் சாய்ந்தவனாக என்னுடைய முகத்தை முன்னோக்கி வைத்து விட்டேன். நான் இணைவைக்கிறவர்களில் உள்ளவனல்ல. நிச்சயமாக உன்னுடைய தொழுகையும், என் வணக்கமும், என் வாழ்வும், என் மரணமும் சர்வ உலகத்தார்களின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியவை. அவனுக்கு யாதோர் இணையுமில்லை. இவ்வாறே நான் ஏவப்பட்டுள்ளேன். நான் வழிபடுபவர்களில் முதன்மையானவன்.

யா அல்லாஹ்! என்னிடமிருந்து இந்த குர்பானியை ஏற்றுக் கொள்வாயாக! உன் திருப் பொருத்தத்திற்காக செய்த குர்பானியாக ஆக்கிடுவாயாக! இதன் மீது எனக்குரிய கூலியை மகத்தானதாக்கி வைத்திடுவாயாக.

## முடி களைந்த பின்...

اَلْحَمْدُ لِلّٰهِ عَلٰى مَا هَدَانَا وَأَنْعَمَ عَلَيْنَا. اَللّٰهُمَّ هٰذِهِ نَاصِيَتِيْ بِيَدِكَ فَتَقَبَّلْ مِنِّيْ وَاغْفِرْ لِيْ ذُنُوْبِيْ. اَللّٰهُمَّ اُكْتُبْ لِيْ بِكُلِّ شَعْرَةٍ حَسَنَةً وَامْحُ بِهَا عَنِّيْ



www.DheenHajService.com

سَيِّئَةً وَارْفَعْ لِيْ بِهَا دَرَجَةً اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ وَلِلْمُحَلِّقِيْنَ وَالْمُقَصِّرِيْنَ يَا وَاسِعَ الْمَغْفِرَةِ . اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ قَضٰى عَنَّا نُسُكَنَا اَللّٰهُمَّ زِدْنَا إِيْمَانًا وَيَقِيْنًا بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

எங்களை நேர்வழி நடத்தாட்டி எங்கள் மீது அருள் கொடைகளை வழங்கிய அல்லாஹ்வுக்கே எல்லா புகழும். யா அல்லாஹ்! என்னுடைய இந்த முன்னெற்றி முடியின் பிடி உன் கையிலிருக்கிறது. எனவே என்னிடமிருந்து நீ ஏற்றுக்கொள்வாயாக! என் பாவங்களை மன்னிப்பாயாக!

யா அல்லாஹ்! ஒவ்வொரு முடிக்கும் பகரமாக (எனக்கு) ஒரு நன்மையை எழுதி, ஒரு தீமையை என்னை விட்டும் அழித்து, ஒரு பதவி உயர்வையும் எனக்கு வழங்கிடுவாயாக!

யா அல்லாஹ்! எனக்கும் முடியை சிரைத்துக் கொண்டவர்களுக்கும், முடியை வெட்டிக் கொண்ட வர்களுக்கும், நீ மன்னித்தருள்வாயாக. விசாலமான மன்னிப்பாளனே! எங்களுடைய ஹஜ் கிரியைகளை

www.DheenHajService.com

எங்களுக்கு நிறைவேற்றி வைத்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்.

யா அல்லாஹ்! எங்களுக்கு ஈமானையும், உறுதியையும் அதிகப்படுத்துவாயாக! அருளாளர்களிலெல்லாம் மாபெரும் அருளாளனே.

**முடிகளை களைந்த பின்னர் இஹ்ராமிலிருந்து நீங்கிக் கொள்ளலாம்.**

## தவாஃபுல் விதாஃ துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ حَمْدًا كَثِيْرًا طَيِّبًا مُبَارَكًا فِيْهِ اَللّٰهُمَّ
ارْزُقْنِيْ اَلْعَوْدَ بَعْدَ الْعَوْدِ الْمَرَّةَ بَعْدَ الْمَرَّةِ اِلٰى
بَيْتِكَ الْحَرَامِ وَاجْعَلْنِيْ مِنَ الْمَقْبُوْلِيْنَ عِنْدَكَ يَا
ذَا الْجَلَالِ وَالْاِكْرَامِ. اَللّٰهُمَّ لَاتَجْعَلْهُ اٰخِرَ
الْعَهْدِ مِنْ بَيْتِكَ الْحَرَامِ وَاِنْ جَعَلْتَهُ اٰخِرَ الْعَهْدِ
فَعَوِّضْنِيْ عَنْهُ الْجَنَّةَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ.

ஏராளமான, மணம் மிக்க, அதில் பரக்கத்து செய்யப்பட்ட புகழாக, புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன. யா அல்லாஹ்! சங்கை மிக்க உன் திரு வீட்டின் பக்கம் மீண்டும் மீண்டும் வருவதை ஒரு தடவைக்குப் பின் மற்றொரு தடவை வருவதை எனக்கு நீ வழங்கிடுவாயாக.

யா அல்லாஹ்! சங்கைக்குரிய உன் வீட்டின் கடைசி தடவையாக இதனை நீ ஆக்கிவிடாதே. அவ்வாறு கடைசி தடவையாக இதனை நீ ஆக்கினால் சொர்கத்தை இதற்கு பகரமாக எனக்கு நீ தந்தருள்வாயாக. கிருபையாளர்களில் மாபெரும் கிருபையாளனே.

www.DheenHajService.com